செய்தி வெளியீடு எண். 166 நாள். 26.03.2018

# மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் ரூ. 5 இலட்சத்தி 29 ஆயிரத்தி 900 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (26.03.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும், இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 87 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 36 மனுக்களும், சமூக நலத்திட்டம் 7 மனுக்களும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 1 மனுவும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 7 மனுக்களும், வேலைவாய்ப்பு 223 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 19 மனுக்களும், சான்றிதழ் 5 மனுக்களும், இதரதுறை 47 மனுக்களும், அடிப்படை வசதி / போக்குவரத்து / சுகாதாரம் 8 மனுக்களும், ஊரக / நகர்ப்புற வளர்ச்சி 16 மனுக்களும், கடனுதவி 6 மனுக்களும், குடும்ப அட்டை 4 மனுக்களும், கல்வி 1 மனுவும் மற்றும் பேரிடர்கள் 1 மனுவும் ஆக மொத்தம் 468 மனுக்கள் பெறப்பட்டது. இம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் விருப்ப உரிமை நிதியிலிருந்து திருவள்ளூர் வட்டம், அதிகத்தூர் இருளர் காலனியைச் சேர்ந்த இருளர் இன மக்கள் கல்வி வளர்ச்சியில் மேம்பாடு அடைய ரூ.79,400 மதிப்பிலான 2 கணினிகள் மற்றும் அச்சு இயந்திரமும், 2 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் ஜூடோ உலக கோப்பை விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ள துருக்கி நாட்டிற்கு சென்று வர செலவுத்தொகையாக தலா ரூ.1,09,000 வீதம் 2 நபர்களுக்கு ரூ.2,18,000-க்கான (2 X ரூ.1,09,000 - ரூ.2,18,000) காசோலைகளையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சார்பாக 31 நரிக்குறவர் நல வாரிய பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு தனிநபர் தொழில் தொடங்குவதற்கு அரசு மானியத்தொகையாக ரூ.2,32,500-க்கான (31 X ரூ.7500 - ரூ.2,32,500) உதவித்தொகையும் ஆக மொத்தம் ரூ. 5 இலட்சத்தி 29 ஆயிரத்தி 900 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு,சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரா.சக்திவேல், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு.சீ.ஜானகிராமன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.ரூபன்தாஸ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், மாவட்ட விளையாட்டு இளைஞர் நல அலுவலர் திரு,செ.அருணா மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**